Pedal looms and power looms.

* 2875 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of pedal looms that have been supplied to the co-operative weavers' societies in this State; and

(*b*) the amount allotted for Arcot?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Twenty-eight pedal looms were supplied to twelve weavers' co-operative societies under the Cess Fund Schemes.

(*b*) No separate allotment has been made for Arcot. But two weavers' co-operative societies in North Arcot district were supplied with five pedal looms.

* 2876 *Q.*—DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the number of permits for powerlooms given in the State during the year 1954–55 and the conditions governing them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Three permits for a total number of 148 powerlooms were given for working on cotton yarn and sixty-three permits for a total number of 328 powerlooms for working on non-cotton yarn were given from April 1954 to August 1955.

SRI M. PALANIYANDI: சர்க்கார் மதுரை ஜில்லாவில் சின்னாலப் பட்டி பகுதியில் இந்த விசைத் தறிகள் கொடுத்த காரணமாக அங்குள்ள கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே கொடுத்ததை நிறுத்தி விடமுடியுமா? அல்லது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதற்கு அரசாங்கம் முயலுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சின்னாலப்பட்டியில் 2 பவர்லூம்கள் கொடுத்ததாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதனால் எந்தக் கைத்தறித் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தத் தறிகளைக் கொடுப்பதற்கு அதிகாரம் உள்ளவர் டெக்ஸ்டைல் கமிஷனர் தான். இந்த அரசாங்கம் இல்லை.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: இந்த விசை தறிகள் கொடுக்கப்பட்டால் 'மாஸ்டர் வீவர்' களிடமிருந்து இப்போது அந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காமல் கஷ்டப்படாமலிருப்பதற்காக என்ன பாதுகாப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? இந்த 'பெடல்லூம்' களை கோஆபரேடிவ் ஸொஸைடி மூலமாக வேலையில்லாத நெசவாளர்களுக்குக் கிடைக்கும்படியாக செய்வார்களா? அல்லது வேலையில்லாத கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எந்த கைத்தறித் தொழிலாளிகளும் வேலை போகாதிருக்கும்படியான நிலைமையில் தான் மத்திய அரசாங்கத்தாரும், இந்த அரசாங்கத்தாரும், டெக்ஸ்டைல் கமிஷனரும் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஒரு 'பவர் லூம்' வைத்துக்கொண்டிருக்கிறவர் இம்மாதிரி 5 தறிகள் வைத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவருக்குத்தான் 'பவர் லூம்' கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே வேறு என்ன பாதுகாப்பு என்ற விவரம் பற்றி சொல்வதற்கில்லை. ஆனால் எல்லாப் பாதுகாப்புகளும் கையாளப்படும்.